**Arimaa Nokku Journal** **ISSN: 2320-4842**
**(UGC Care Group-I Journal)** **Vol-17 No. 04 October-December 2023**

# தொல்காப்பிய வழி கலித்தொகை காட்டும் எழுதிணைகள்

**திருமதி. நா.பகுஷியா பேகம்,**
உதவிப்பேராசிரியர்,
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி (தன்னாட்சி),

## முன்னுரை

மொழியும் பழக்க வழக்கங்களும் தான் ஒரு மனிதனின் பெருமையை பறை சாற்றுகின்றன. பல ஆண்டுகளுக்கு முன்பே தோன்றி செம்மொழிகளில் ஒன்றாக விளங்கும் நம் தமிழ்மொழி அதனை நமக்கு நன்கு உணர்த்தும். . அம்முத்தமிழின் சிறப்புகளை எடுத்துரைக்கும் இலக்கியங்களுள் சங்க இலக்கியம் சிறப்பான இடத்தைப் பெறுகின்றது. அதிலும் முத்தமிழின் சிறப்புகளை முழுமையாக கொண்ட நூல்களுள் சங்க இலக்கியத்தைச் சார்ந்த தொன்மை காலத் தமிழிலக்கியத் தொகுதியான எட்டுத்தொகை நூல்களுள் ஆறாவது நூலாகிய கலித்தொகையே ஆகும். கலித்தொகையில் சுட்டப்படும் மனிதனின் மொழிகளும் பண்பாடும் அறம் சார்ந்த பண்பாட்டை நெறிப்படுத்துவதாக அமைகின்றன. மேலும் இக்கலித்தொகையில் அமைந்துள்ள மக்களின் வாழ்வியல் முறைகளை அறியும் பொழுது தமிழர்களின் தொன்மை நிலையினையும் தொல்காப்பியரின் எழுதிணை அமைப்பினையும் நம்மால் அறிந்து கொள்ள முடியும். எனவே கலித்தொகையில் அமைந்துள்ள நூல் அமைப்பு முறையினைக் கொண்டு ஒழுக்கத்திணைக் குறிக்கும் தொல்காப்பியரின் எழு வகை திணையினை இங்கு காண்போம்.

## கலித்தொகை

சங்க இலக்கியங்களுள் ஒன்றான கலித்தொகை பல சிறப்புகளைப் பெற்று காணப்படுகின்றது. அவ்வகையில் எட்டுத்தொகை நூல்களுள் யாப்பு வகையால் பாடப்பட்டவை பரிபாடலும் கலித்தொகையும் ஆகும். இதனைத் தான் தொல்காப்பியர்,

**கலியே பரிபாட்டு ஆயிரு பாவினும்**
**உரியது ஆகும் என்மனார் புலவர்.** [1] [தொல். பொருள். அகத். - 56]

என்கிறார். இக்கலியாப்பு தரவு, தாழிசை, அம்போதரங்கம், அராகம், தனிச்சொல், சுரிதகம் ஆகிய உறுப்புகளைக் கொண்டு பிற யாப்பு முறைகளைக் காட்டிலும் வேறுபட்டு காணப்படுகின்றது. இது ஒத்தாழிசை யாப்பு வகையில் அமைந்துள்ளது.
எட்டுத்தொகை நூல்களில் பாடல்களால் எந்தவொரு சிதைவும் குறைவுமின்றி நிறைவுடன் இன்றளவும் திகழ்வன அகநானூறும் கலித்தொகையும் ஆகும். கலித்தொகை கடவுள் வாழ்த்து உட்பட 150 (கடவுள் வாழ்த்து - 01, பாலை - 35, குறிஞ்சி - 29, மருதம் - 35, முல்லை - 17 நெய்தல் - 33) பாடல்களைக் கொண்டுள்ளது. **'கற்றறிந்தார் ஏத்தும் கலி'** என்ற சிறப்பும் கொண்டு விளங்குகின்றது. தொல்காப்பிய நூலில்,

> **கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்**
> **முற்படக் கிளந்த எழுதிணை என்ப.** [2] [தொல். பொருள். அகத். - 1]

என்று கூறியபடி அகத்திணை ஏழினுள் கைக்கிளை, பெருந்திணை பற்றி பேசக்கூடிய நூல் சங்க அகப்பாடல்களில் கலித்தொகையே ஆகும். அதோடன்றி உரையாடல் போன்று கூற்று அடிப்படையில் அமைந்து தனிச் சிறப்பும் பெற்ற நூல் கலித்தொகையே ஆகும்.

**எழுதிணை**

திணை என்னும் சொல் சங்கப் பாடல்களில் நிலம், ஒழுக்கம் என்ற பொருள்களில் கையாளப்படுகின்றது. இருப்பினும் நால்வகை நிலமே சுட்டப்படுவதால் திணை என்பதற்கு ஒழுக்கமே பொருள்படும் என உரையாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். ஏனென்றால்,

**புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்**
**ஊடல் அவற்றின் நிமித்தம் என்றிவை**
**தேரும் காலை திணைக்கு உரிப்பொருளே.**[3]
[தொல். பொருள். அகத். - 16]

எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

**கைக்கிளை - ஒருதலைக் காமம் (ஒருபக்க உறவு)**
**குறிஞ்சி - புணர்தலும் புணர்தல் நிமித்தமும்**
**முல்லை - இருத்தலும் இருத்தல் நிமித்தமும்**
**மருதம் - ஊடலும் ஊடல் நிமித்தமும்**
**நெய்தல் - இரங்கலும் இரங்கல் நிமித்தமும்**
**பாலை - பிரிதலும் பிரிதல் நிமித்தமும்**
**பெருந்திணை - பொருந்தாக் காமம்**

என உரிப்பொருட்களை திணைக்கு ஒன்றாக தொல்காப்பியர் குறிப்பிடுவாதல் ஒழுக்கம் என்கின்றனர். மக்களிடையே நிகழும் ஒழுக்கமே உரிப்பொருள் ஆகும். இவ்வெழு வகை திணைகளையும் ஒருங்கே கொண்ட நூல் கலித்தொகையே ஆகும்.

**பாலைத் திணை**

பாலைத்திணைக்குரிய ஒழுக்கம் பிரிதலும் பிரிதல் நிமித்தமும் என்பதை தொல்காப்பியர் பின்வரும் நூற்பாவில்

**கொண்டு தலைக்கழிதலும் பிரிந்து அவண் இரங்கலும்**
**உண்டு என மொழிப ஓர் இடத்தான.** [4]
[தொல். பொருள். அகத். - 17]

என்று குறிப்பிடுகின்றார். இதனையே பெருங்கடுங்கோன் பாடிய 2 முதல் 36 வரை உள்ள 35 பாலைக்கலிப் பாடல்களும் கலித்தொகையில் பேசுகின்றன.

**ஈஎன இரத்தல் இழிந்தன்று அதன்எதிர்**
**ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று** [5] [புறம் : 204]

எனும் புறநானூற்று வரிகளை உணரத்தும்படி தலைவன் இல்வாழ்க்கையை முறைப்படி நடத்துவதற்கு பொருள் தேவை என்று கூறி தலைவியை விட்டு பொருள் தேட முற்படுகிறான் என செய்தி கலித்தொகையில் அமைந்ததுள்ளது. . அப்பொழுது தோழி,

**மலை இறந்து செயல் சூழ்ந்த பொருள் பொருள் ஆகுமோ**
**நிலைஇய கற்பினாள், நீ நீப்பின் வாழாதாள்,**
**முலை ஆகம் பிரியாமை பொருளாயின் அல்லதை;**
**இல் என, இரந்தார்க்கு ஒன்று ஈயாமை இழிவு என,**[6]
**[பாலைக்கலி** - 2: 12-15]

எனக் குறிப்பிடுகின்றாள். தலைவனும் தோழியின் சொல்கேட்டு அடங்காத யானை யாழ் இசை கேட்டு அடங்கியது போல தலைவியை விட்டு பிரியாது அங்கேயே தங்கினான் என்பதை கீழ்க்காணும் .

**காழ் வரை நில்லாக் கடுங் களிற்று ஒருத்தல்**
**யாழ் வரைத் தங்கியாங்குத்...** [7] **[மேலது** 26-27]

என்ற வரிகள் விளக்கும். இங்ஙனம் தொல்காப்பியரின் வழி பாலைக்கலி பாடல்கள் பிரிதலையும் பிரிதல் நிமித்தங்களையும் கொண்டு அமைந்துள்ளன என்பதை அறிய முடிகின்றது. .

**குறிஞ்சித் திணை**

கலித்தொகையில் குறிஞ்சிக்கலி கபிலரால் பாடப்பட்டு 29 பாடல்களைக் கொண்டுள்ளது. இப்பாடல்கள் அறத்தோடு நிற்றல், வரைவு கடாவுதல், இற்செறிப்பு, இரவுக்குறி, குறிஞ்சியைப் போற்றல், குறிகோடல், தினைப்புனம் காத்தல் போன்ற புணர்தலும் புணர்தல் நிமித்தங்களை எடுத்துரைக்கின்றன.

குறிஞ்சிக்கலியின் 2 ஆவது பாடலில் தலைவன் தலைவியைக் காணும்பொருட்டு இரவுக்குறியின் கண் வருகிறான். அதனால் தலைவி மிகவும் வருந்துகிறாள். இதை அறிந்த தோழி தலைவன் இரவின்கண் வருவதைத் தவிர்த்து வரைவு மேற்கொள்ளும்படி எடுத்துரைக்கின்றாள். தலைவனும் அதனை ஏற்கிறான்.

**அறம் சாரான் மூப்பே போல் அழிதக்காள், வைகறை,**
**திறம் சேர்ந்தான் ஆக்கம் போல் திருத்தகும்; அத் திருப்**
**புறங்கூற்றுத் தீர்ப்பது ஓர் பொருள் உண்டேல் உரைத்தைக் காண்;** [8]
**[குறிஞ்சிக்கலி** 38: 18-21]

இதனை தோழி தலைவியிடத்தும் கூறுகின்றாள். இங்ஙனம் குறிஞ்சிக்கலியில் தொல்காப்பியத்தின் வழி புணர்தலும் புணர்தல் குறித்த பல செய்திகளும் இடம்பெற்றுள்ளன.

**மருதத் திணை**

ஊடலும் ஊடல் நிமித்தமும் மருதத் திணையின் உரிப்பொருள் (ஒழுக்கம்) ஆகும். ஊடல் என்பது பிணக்கு என்று பொருள்படும். கணவன் மனைவிக்கிடையே ஏற்படும் சிறு பிணக்கினைத்தான் ஊடல் என்று சொல்வர். தலைவன் பொருட் பெண்டிர் என்று அழைக்கப்படும் பரத்தையரிடத்து சென்றுவிட்டு தன் வீட்டிற்கு வருவான். அப்பொழுது தலைவி அவன் மீது ஊடல் கொள்வாள். இவை குறித்ததே மருதத்திணையாகும்.

கலித்தொகையில் மருதனிளநாகனாரால் பாடப்பட்ட 66 முதல் 100 வரையிலான 35 பாடல்களில் முதல் 4 பாடல்கள் ஊடல் தீர்த்து தனக்குத் தானே கூறுவது போன்றும், அடுத்தப் பாடல் பரத்தமைச் சென்ற அவனிடத்து உண்மையைப் பெறுவது போன்றும், அடுத்த 4 பாடல்களில் அதனால் தலைவி ஊடல் கொள்வது போன்றும் 10,11,12 ஆகிய பாடல்கள் தலைவியின் ஊடலை தோழி தீர்ப்பது போன்றும் அமைந்துள்ளன. மேலும் ஏனைய பாடல்களில் ஊடலுக்கு மகன் வாயிலாக நிற்பதும், மகனைக் கொண்டே ஊடல் கொள்வதும் என தொல்காப்பியர் குறிப்பிடும் ஊடல் தொடர்பான செய்திகளும் மருதக்கலியில் பெரிதும் இடம் பெற்றுள்ளன.

**முல்லை மற்றும் நெய்தல் திணை**

தொல்காப்பிய வழி நின்று தனக்கான ஒழுக்கத்தை சிறப்பாக எடுத்துரைத்த அக இலக்கியத்திற்கு கலித்தொகை ஓர் சான்று எனும்படி சோழன் நல்லுருத்திரனாரும்

நல்லந்துவனாரும் முல்லைக்கலியிலும் நெய்தற்கலியிலும் பாடல்களை அமைத்துள்ளனர்.

**முல்லைத் திணை** : நோக்கமும் எண்ணமும் ஒன்றுபட்டு தலைவி இல்லத்தில் ஆற்றியிருத்தல் ஆகும். அதாவது, தலைவனோடு மனத்தால் ஒன்றுபட்டு இருந்த தலைவி தலைவன் பிரிந்து சென்ற போது இல்லிருந்து தன் மனதை ஆற்றியிருத்தலைக் கூறுகின்றன. மேலும் முல்லைக்கலி முல்லை நில மக்களின் வாழ்க்கை முறைகளையும் பண்புகளையும் எடுத்துரைக்கின்றன.

**ஓஒ! இவள்,பொரு புகல் நல் ஏறு கொள்பவர் அல்லால்**
**திரு மாமெய் தீண்டலர்** [9] **[முல்லைக்கலி** 102 : 9-10]

இப்பாடல் வரிகள் ஆயர் குலப்பெண் ஏறு தழுவும் ஆடவனையே விரும்பி மணப்பாள் என்பதை உணர்த்துகின்றது.

**நெய்தல் திணை** : இரங்கிய போக்கு (இரங்கல்) எனப்படும். அதாவது 33 பாடல்களும் பிரிவாற்றாத தலைவி குறித்தும் தலைவனின் துன்பங்களைக் குறித்தும் பேசுவதன்றி மடலேறுதல், மாலைப் பொழுதில் புலத்தல் போன்ற செய்திகளையும் பேசுகின்றது. இவையேயன்றி அறம் குறித்த செய்திகளும் பேசப்படுகின்றது.

**'ஆற்றுதல்' என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்;**
**'போற்றுதல்' என்பது புணர்ந்தாரைப் பிரியாமை;**
**'பண்பு' எனப்படுவது பாடு அறிந்து ஒழுகுதல்;**
**'அன்பு' எனப்படுவது தன் கிளை செறாஅமை;**
**'அறிவு' எனப்படுவது பேதையார் சொல் நோன்றல்;**
**'செறிவு' எனப்படுவது கூறியது மறாஅமை;**
**'நிறை' எனப்படுவது மறை பிறர் அறியாமை;**
**'முறை' எனப்படுவது கண்ணோடாது உயிர் வௌவல்;**
**'பொறை' எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்;**
**ஆங்கு அதை அறிந்தனிர் ஆயின், என் தோழி** [10] **[நெய்தற்கலி** : 133 ; 6-15]

**கைக்கிளை**

கைக்கிளை என்பது ஒருதலைக் காமம் ஆகும். தொல்காப்பியர் கைக்கிளையைக் கீழ்க்காணுமாறு விளக்குகிறார்.

**"காமம் சாலா இளமை யோள்வயின்**
**ஏமம் சாலா இடும்பை எய்தி**
**நன்மையும் தீமையும் என்றுஇரு திறத்தான்**
**தன்னொடும் அவௌாடும் தருக்கிய புணர்த்துச்**
**சொல்எதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்**
**புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே"** [11]
**[தொல். பொருள் அகத்.** - 53]

கைக்கிளை குறித்த பாடல்கள் சங்க இலக்கியங்களில் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன. குறிப்பாக கலித்தொகையில் 4 பாடல்களில் (56,57,58,109) மட்டுமே கைக்கிளைப் பற்றி பேசப்படுகின்றது.

**வகை அமை தண் தாரான் கோடு உயர் பொருப்பின்மேல்,**
**தகை இணர் இள வேங்கை மலர் அன்ன சுணங்கினாய்!**
**மத வலி மிகு கடாஅத்து அவன் யானை மருப்பினும்**
**கதவவால் தக்கதோ? காழ் கொண்ட இள முலை**
**என ஆங்கு,** [12] **[குறிஞ்சிக் கலி** 57: 16 - 20]

இப்பாட்டில் தலைவன் காம மிகுதியால் பல சொற்களைக் கூறுகிறான். தலைவியோ பதில் கூறாமல், தலை கவிழ்ந்து தன் வீட்டுக்குச் சென்று விடுகிறாள். தன் அறிவை அவளிடம் இழந்துவிட்டு அரற்றுகிறான் தலைவன். இங்குத் தலைவியின் இளமை பற்றிக் கூறுவதனால் '**காமம் சாலா இளமையோள்**' என்னும் தொல்காப்பிய இலக்கணம் இங்கு அமைந்திருக்கக் காணலாம்.

**இரு நோக்கு இவள் உண்கண் உள்ளது ஒரு நோக்கு**
**நோய்நோக்கு ஒன்று அந்நோய் மருந்து** [13] **[குறள் - 1091]**

இத் திருக்குறளை நினைவூட்டும் வகையிலும் இப்பாட்டு அமைந்துள்ளது. இவையே அன்றி மற்ற இலக்கணங்களையும் கலித்தொகை பாடல்கள் பெற்றுள்ளன .

**பெருந்திணை**

அகத்திணை ஏழனுள் ஒன்றாகப் பெருந்திணையைக் குறிப்பிடுகின்றார் தொல்காப்பியர். அவர் ஒவ்வாக் காதலாகிய பொருந்தாக் காமம் கொண்ட பெருந்திணையின் கூறுகளாக நான்கினைக் குறிப்பிடுகின்றார். அவை,

**ஏறிய மடல் திறம் இளமை தீர்திறம்**
**தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்**
**மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்**
**செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே** [14]
**[தொல். பொருள். அகத். - 56]**

என்பதாகும். இந்நான்கு கூறுகளும் கலித்தொகையில் 14 பாடல்களில் இடம்பெற்றுள்ளன. கலித்தொகையின் 138 ஆவது பாடல் ஏறிய மடல் திறம் குறித்தும், 94 ஆவது பாடலில் இளமை தீர்திறம் குறித்தும், 142 ஆவது பாடலில் தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம் குறித்தும், 112 ஆவது பாடலில் மிக்க காமத்து மிடல் குறித்தும் அமைந்துள்ளனன.

**முடிவுரை**

திணை குறித்தும் அதன் வகைகள் குறித்தும் தொல்காப்பியர் அகத்திணையியலில் உள்ள நூற்பக்களைக் கொண்டு அழகுற விளக்கிச் செல்லுவார். அதனை சங்க அக இலக்கிய நூல்களில் கலித்தொகை நன்கு எடுத்துரைக்கும் விதம் பாடல்கள் சிறப்பாக அமைந்துள்ளன. . இங்ஙனம் தொல்காப்பியர் கூறிய எழுதிணைகளையும் தன் ஒரே நூலில் ஆசிரியர் நல்லந்துவனார் அழகாக இலக்கிய நயத்துடன் கொண்டுச் செல்லும் வழி முத்தமிழின் சிறப்புகளை நாம் நன்கு அறிய முடிகின்றது.

**துணைநூற் பட்டியல்**

1. தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல். இளம்பூரணர் உரை, சாரதா பதிப்பகம், சென்னை, பதிப்பு 2016.

2. புறநானூறு, புலியூர்க்கேசிகன் உரை, ஸ்ரீ செண்பகா பதிப்பகம், சென்னை, பதிப்பு 2010.

3. கலித்தொகை மூலமும் உரையும், முனைவர் அ. விசுவநாதன், பாவை பிரிண்டர்ஸ், சென்னை, பதிப்பு 2004.

4. திருக்குறள், பரிமேலழகர் உரை, சாரதா பதிப்பகம், பதிப்பு 2009.